செ.வெ. எண்: 502 நாள்: 3.8.2011

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.8.2011) தலைமைச் செயலகத்தில், 45 ஆண்டுகளாக குடியிருப்பு வீடுகளுக்கு பட்டா கோரிய திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கினார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராமம், இனாம் ஒழிப்புச் சட்டம் 26/63–ன் கீழ் 15.4.1965–ல் கையகப்படுத்தப்பட்ட கிராமமாகும். இதன்படி அன்றைய நிலையில் நஞ்சை, புஞ்சை நிலங்களை அனுபவத்தில் வைத்துள்ளவர்களுக்கு ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 1987–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நத்தம் நில அளவைத் திட்டத்தில், குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டிருந்த 2,780 வீடுகளுக்கு நத்தம் மனைவரி தோராயப் பட்டா தயாரிக்கப்பட்டு, அதற்கான நில அளவை கணக்குகள் தயார் செய்யப்பட்டது. அரசின் இந்த நத்தம் நிலவரித் திட்ட அளவை தொடர்ந்து பல்வேறு உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றன. அரசுக்கு பாதகமாக வழங்கப்பட்ட தீர்ப்புகளை எதிர்த்து 2005–ஆம் ஆண்டு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணைக்கு வராமல் நீண்ட காலமாகத் தேக்கமடைந்திருந்த நிலையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசின் தீவிர நடவடிக்கையால் இவ்வழக்கு 10.6.2011, 20.6.2011 மற்றும் 27.6.2011 ஆகிய தேதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 1.7.2011–ஆம் நாளன்று அரசுக்கு சாதகமாக தீர்ப்புரை வழங்கப்பட்டது.

இத்தீர்ப்பினைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி நிலவரித் திட்ட அளவையில் தயார் செய்யப்பட்ட நத்தம் நிலவரி தூய அடங்கல் பதிவுகள் அனைத்தையும் தல ஆய்வு செய்து உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தல ஆய்வில் மொத்தம் 2,780 குடியிருப்பு வீடுகள் கண்டறியப்பட்டது. இவ்வீடுகளில்

குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 45 ஆண்டுகளாக வீட்டுமனைப் பட்டா பெற போராடி வந்த திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஏழு குடும்பங்களுக்கு இன்று (3.8.2011) தலைமைச் செயலகத்தில், வீட்டுமனைப் பட்டாக்களை நேரில் வழங்கினார்கள். மேலும், மற்ற பயனாளிகளுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி இன்றே சிவந்திபுரம் கிராமத்தில் பட்டா வழங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து வீட்டுமனை பட்டாக்களைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் பல காலமாக இருந்து வந்த பிரச்சனைக்கு உரிய தீர்வுக் கண்டு, உடனடியாக தாங்கள் குடியிருந்த வீடுகளுக்கு பட்டா வழங்கியமைக்காக தங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர், வருவாய்த்துறை முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள் : 3.8.2011